1972 நவம்பர் 14]

Attack on a Journalist

* 289 Q.—THIRU T. K. SHANMUGAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that an Editor of a paper has been attacked with weapons near the Clock Tower junction at Nagercoil, Kanyakumari district on the night of 23rd September, 1971;

(b) whether it is a fact that some persons were arrested in this connection, and later released on bail; and

(c) if so, the action taken thereon?

பத்திரிகை ஆசிரியர் மீது தாக்குதல்

திரு. தி. க. ஷண்முகம் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 23—9—1971 இரவு கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மணி மேடை சந்திப்பின் அருகில், பத்திரிகாசிரியர் ஒருவர் ஆயுதங்களைக் கொண்டு தாக்கப்பட்டாரென்பது உண்மையா ?

(இ) இது சம்பந்தமாகச் சிலர் கைது செய்யப்பட்டு, பின்னர் ஜாமீனில் விடப்பட்டது உண்மையா ?

(உ) ஆமெனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ), (இ), (உ) " தீவிரவாதி " இதழின் ஆசிரியரான திரு. வேலாயுதம் 23—9—1971 அன்று நாகர்கோயில் மாடச் சந்திப்பில் (Tower Junction) நான்கு பேர்களால் தாக்கப்பட்டதாக கோட்டாறு காவல் நிலையத்தில் புகார் செய்தார். வழக்குப் பதிவு செய்யப் பட்டு இருவர் கைது செய்யப்பட்டனர். பிறகு அவர்கள் விடுதலை செய்யப் பட்டனர். புலனாய்வுக்குப் பிறகு, நாகர்கோயில் நகர சப்-மாஜிஸ்ட்ரேட் முன் னிலையில் ஒருவர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ஆனால் தங்கமணி என்பவரையும், அவ்வழக்கில் சேர்க்க வேண்டுமென திரு. வேலாயுதம் உயர்நீதி மன்றத்தை அணுகி, நாகர்கோயில் நகர சப் மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றத்தில் விசாரணையிலுள்ள வழக்கைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படி. உத்தரவு பெற்றார்.

திரு. தி. க. ஷண்முகம் : தலைவரவர்களே, இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட திரு. என். ஏ. வேலாயுதம் ஒரு சிறந்த எழுத்தாளர். அவர் ஒரு நல்ல

நாடகம் எழுதி நம்முடைய தமிழகச் செய்தித் துறையினரின் பரிசையும் பெற்றிருக்கிறார். அவர் சிறந்த நாவலாசிரியருமாவார். அவரை எனக்கு மிக நன்றாகத் தெரியும். வீடு கட்டுவதற்குக் கடன் கொடுக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கச் செயலாளரின் முறைகேடான செயல்களைப்பற்றித் தமது பத்திரிகையில் எழுதியது காரணமாக, இப்படிப் பகிரங்கமாகத் தாக்கியதாகச் சொல்லப் படுகிறது. இந்த வழக்கில் விரைவில் நடவடிக்கை எடுத்து திரு. வேலாயுதம் அவர்களுக்கு நீதி கிடைக்கும்படியாக அரசால் செய்ய இயலுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நீதிமன்ற விவகாரங்களில் அரசு தலையிட முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

Suicide near Rasipuram

* 290. *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Chief Minister be pleased to state--

(*a*) whether it is a fact that a family consisting of four members has committed suicide near Rasipuram, Salem, during May 1972; and

(*b*) if so, the reason for the suicide?

ராசிபுரம் அருகே தற்கொலை.

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972 மே திங்களில், சேலம், ராசிபுரம் அருகே நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பம் தற்கொலை செய்து கொண்டது உண்மையா ?

(இ) ஆமெனில், அவ்வாறு தற்கொலை செய்து கொண்டதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) வாழ்க்கையில் ஏற்பட்ட வெறுப்பே இத்தற்கொலைக்குக் காரணமாகும்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : கேள்வி எண்கள் 296 முதல் 298 வரை ஒத்தி வைக்கப்படுகின்றன.